பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ௵ வைகாசி மீ 20 உ திங்கட்கிழமை (03-06-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 181

# படையினரின் அத்துமீறல்கள் அரச பயங்கரவாதமே!

**நகரிலும் மழை!**

நீண்ட கால இடைவெளியின் பின்னர் நேற்றிரவு யாழ். நகரப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சுமாராக மழை பெய்தது. [ஓ]

## விடைத்தாள்கள் 6 ஆம் திகதி எடுத்துச் செல்லப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 3

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. [உயர்தர] விசேட பரீட்சை விடைத்தாள்கள் எதிர்வரும் ஆறாம் திகதி கொழும்புக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் ஐந்தாம் திகதியுடன் பரீட்சைகள் முடிவடைகின்றன.

யாழ். வந்துள்ள பரீட்சைத் திணைக்கள அதிகாரி திரு. த. மகேசரன் விடைத்தாள்களை பொறுப்பேற்று வாகன மூலம் எடுத்துச் செல்வார். யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கமும் கூடச் செல்வார்.

கிளிநொச்சி மாவட்ட விடைத்தாள்களையும் அவர்கள் கொழும்பு பயணமாகும் வழியில் எடுத்துச் செல்வர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## காங்கிரஸின் வெற்றி உறுதி; பிரதமர் தெரிவில் இழுபறி!

### இந்திய செய்தி நிறுவனம் ஆரூடம்

புதுடில்லி, ஜூன் 3

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்டதால் எழுந்துள்ள அனுதாப அலை இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு நடைபெறவிருக்கும் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு வெற்றியைத்தேடிக் கொடுக்கும்; ஆனால் அதன் பின்னர் யார் பிரதமராவது என்ற விவகாரம் கட்சிக்குள் பெரும் பூசலைக் கிளப்பும்.

புதுடில்லியிலிருந்து வெளியான ஏ. எவ். பி. செய்தி ஒன்று இவ்வாறு தெரிவிக்கிறது.

கட்சித் தலைவராக பி. வி. நரசிம்மராவ் சிக்கலின்றி தெரிவு செய்யப்பட்டிருப்பதாக வெளியே தோன்றினாலும் கட்சிக்குள்ளே தலைவர் தெரிவு குறித்து அதிருப்தி நிலவுவதாக அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது.

தேர்தல் சூழ்நிலையில் உட்கட்சிப் பூசலை வெளியே காட்டினால் அது தேர்தலில் பெரும் தோல்வியை ஏற்படுத்தி விடுமென்று கருதியே அதிருப்தியாளர்கள் மௌனம் சாதித்துக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும் தேர்தல் வெற்றியை அடுத்து காங்கிரஸில் மீண்டும் தலைமைப் பதவி, பிரதமர் பதவி ஆகியவற்றில் பெரும் சர்ச்சை தோன்றும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. [உ]

## அதிபர் தரப் பரீட்சைகள் ஜூலை 6, 13 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 3

அதிபர் தரம் I, II, III இற்கான பதவி உயர்வுப் பரீட்சைகள் அடுத்தமாதம் 6 ஆம் திகதியும் 13 ஆம் திகதியும் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கின்றன.

பல தடவைகள் ஒத்தி வைக்கப்பட்ட இந்தப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் குறித்து கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தரம்மூன்றுக்கான பரீட்சை 6-7-91 இலும், தரம் I, II இற்கான பரீட்சைகள் 13-7-91 இலும் நடைபெறஇருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. [ஓ 3]

## பிரட்மனுக்கு மன்னிப்புச் சபை கடிதம்

லண்டன், ஜூன் 3

அரசாங்கப் படையினர் திட்டமிட்டுச் செய்யும் கொலைகள், சித்திரவதைகள், நீதிவிசாரணையில்லாத கொலைகள், "காணாமற்போக"ச் செய்தல், பழிவாங்கும் நோக்குடன் நிராயுதபாணிகள் மீது தாக்குதல் நடத்துதல் போன்றவை — பெரும் அத்துமீறல் செயல்களாகும்.

அவற்றை எந்தக் காரணத்தைக் கூறியும் அரசு அனுமதித்தால்— அல்லது அத்தகைய செயல்களுக்கு படையினர் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் விட்டால் — அது அரச பயங்கரவாதமாகும். அதாவது அரசாங்கமே பயங்கரவாதத்தைத் தூண்டுவதாகும்.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் ஸ்ரீலங்கா அரசுக்கு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில் சாடியுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனுக்கு, சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் திரு. இயன் மார்டின் எழுதிய நீண்ட கடிதம் ஒன்றில் ஸ்ரீலங்கா அரசின் மெத்தனம் குறித்து கண்டிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்திலுள்ள முக்கிய அம்சங்களில் சில வருமாறு:-

★ ஆயுதம் தாங்கிய குழுக்கள் படையினர் மீது தாக்கு

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப......தேர்தலுக்கு பிறகு இந்திய அரசியல் நிலைமை சூடு பிடிக்கும் எண்டு சொல்லுங்கோ......!

## பரீட்சை 15 இல்

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் மூன்றுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெற இருப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பதவி வழி பதவி உயர்வுக்கான பரீட்சைகளை கொழும்பிலேயே நடத்துவது என்று அரசு முடிவு செய்ததற்கு ஏற்ப கொழும்பிலேயே இந்தப்பரீட்சை நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## தென்பகுதியில் கடும் மழை!

கொழும்பு, ஜூன் 3

தென் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கடும் மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆயிரக் கணக்கானோர் வீடு வாசல்களை இழந்துள்ளனர்.

கொழும்பு, காலி, கம்பஹா, குருநாகல், கண்டி, இரத்தினபுரி, நுவரெலியா மாவட்டங்களிலேயே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுளளது. வெள்ளத்தினால் வீதிகள் பல துண்டிக்கப்பட்டுள்ளன.

ஜின் கங்கை உடைப்பெடுத்ததால் மூன்று கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்றும் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் கடும் மழையும், ஏனைய இடங்களில் பரவலாகவும் மழை பெய்யலாம் என்று கொழும்பு வானிலை அவதான நிலையம் தெரிவித்தது. [உ-3]

## கொழும்பு ஹோட்டலில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

கொழும்பு, ஜூன் 3

கொழும்பு, கோட்டையிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலான — கலதாரி ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை இரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

இரு வாலிபர்கள் ஹோட்டலினுள் பிரவேசிக்க முற்பட்டபோது, பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர்கள் கொண்டு வந்த "பிரிவ் கேஸ்" சோதிக்க முனைந்தார் என்றும்—

அப்போதே அந்த வாலிபர்களில் ஒருவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது துப்பாக்கி [illegible] என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து தப்பியோடிய இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட இரு வாலிபர்களும் வெள்ளவத்தைப் பகுதியிலுள்ள பிரபல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர். [ஓ-3]

## யாழ்ப்பாணத்தில் வேலை செய்ய விரும்பாத யாழ்ப்பாணத் தமிழர்!

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த தமிழர்கள் பன்னிரண்டு பேர் யாழ்ப்பாணத்தில் பணி புரிவதற்கு விரும்பவில்லை! வேறு மாவட்டங்களுக்கு நியமனம் தருமாறு கேட்கிறார்களாம்.

இவர்கள் பன்னிரண்டு பேரும் புதிய இனவிகிதாசார முறையில் அமைந்த நியமனத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆவர்.

எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை கடந்த நவம்பர் மாதத்தில் [illegible] பெற்றது. யாழ்ப்பாணம் பரீட்சை நிலையங்களில் இன்றாக இருந்த போதிலும், யுத்தச் சூழ்நிலை காரணமாக இங்கு பரீட்சை நடைபெறவில்லை.

ஒரு சிலர் கொழும்புக்குச் சென்று பரீட்சை எழுதினர். அவர்களில் 12 பேர் நியமனம் [illegible] னர். ஆனால் யாழ்ப்பாணத் [illegible]

[6 ஆம் பக்கம் பார்க்க]

## குண்டு வெடிப்புடன் சம்பந்தப்பட்ட மனோகரி என்ற பெண் பற்றி இந்தியக் குழு விசாரணை!

கொழும்பு, ஜூன் 3

மருதானையில் நடந்த குண்டு வெடிப்பின் சூத்திரதாரி எனக் கருதப்பட்ட மனோகரி சானந்தன் என்ற பெண்மணி பற்றி கொழும்பு வந்துள்ள இந்திய புலனாய்வுக் குழு விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1987 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் திகதி மருதானை ஸாஹிறாக் கல்லூரிக்கு முன்பாக வாகனம் ஒன்றில் இருந்த குண்டு வெடித்ததால், 40 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மனோகரி என்ற இரு

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லின மறி ஆடு, கடா ஒன்றும் விற்பனைக்கு உண்டு. பிற்பகல் 4 00 மணி வரை பார்வையிடலாம் தொடர்பு: 15/1, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டிக்குளி. [17034]

சம்மிட் புதிய, பழைய இலிசைப்பட வீடியோ பிரதிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி. பரமசிவம்பிள்ளை, மூத்ததம்பிவளவு, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. [4120]

### தேவை

பெண்கள், குழந்தைகள் அனைவரது உடைகளையும் மிகவும் நாகரீகமான முறையில் தானே வெட்டித் தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த ஜென்ஸ் டெயிலர் உடன் தேவை. தகுந்த சம்பளம் தரப்படும். உடன் நேரில் வரவும் திருமகள் தையல் நிலையம், [கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட் முன்பாக] கல்வியங்காடு. [17029]

### உடன் தேவை

ரோனியோ வேலையில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ள வேலை ஆட்கள் தேவை. நல்ல வேலை ஆளுக்கு உடன் வேலை வழங்கப்படும். தகுந்த சம்பளமும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். சோதி பேக்கரி பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் [16971]

### மணமகன் தேவை

கொழும்பில் அரசாங்க திணைக்களத்தில் பணிபுரியும் சட்டத்துறையில் பட்டம் பெற்ற யாழ். இந்து 30 வயதுப் பெண்ணுக்கு வரன் தேவை. பட்டதாரி, கணக்காளர், வங்கி உத்தியோகத்தர், வழக்கறிஞர் போன்றோருக்கு விரும்பத்தக்க சீதனம் வழங்கப்படும் சகல விபரங்களுடனும் தொடர்பு: S S இராஜா ஈஸ்வரி வாசம், ஆனைக்கோட்டை. [17021]

### அறிவகம்

பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள் ஏனைய உபகரணங்கள், பேப்பர் வகைகள் குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374 மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கருகில்] [சி-0034]

### திருமண சேவை

பெண் பட்டதாரிகள் விரிவுரையாளர்கள் C.I M.A. சித்தி பெற்று தொழில் புரிபவர்களுக்கு ஏற்ற மணமகன்கள் தேவை. கு. திருவிளங்கம், 16/16, வளன்புரம், கொழும்புத்துறை: காலை 9-00 மணி வரையும் பிற்பகல் 2 00 மணி தொடக்கம் சந்திக்கலாம். [17020]

### கல்வி

ஆண்டு 5 இலிருந்து G.C E. [O/L] வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 மணித்தியாலத்திலிருந்து 40 மணித்தியாலத்திற்குள் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, வைத்தீஸ்வரா வீதி, சுண்டிக்குளி. [4122]

### வைத்தியம்

செங்கண்மாரி, குட்டநோய், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைவலி, குதக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம். [4099]

### புலமைப் பரிசில் பரீட்சை வகுப்பு

வேலணை சைவப்பிரகாச வித்தியாலய ஆண்டு ஐந்து மாணவர்களுக்காக திரு. பொ. சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்களால் நடத்தப்படும். வகுப்புகள் 164, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் [கைலாசபிள்ளையார் கோவில் அருகாமையில்] தற்காலிகமாக நடைபெறுகின்றன வெற்றிடங்கள் உண்டு. [16972]

### PERSONAL CLASSES MATHS (கணிதம்)

G C,E [O/L] 90, 91 மற்றும் ஆண்டுகள் 6, 7, 8 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் கதிப்பதில் நீண்டகால அனுபவமுள்ள ஆசிரியரினால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சித்திக்கு உத்தரவாதம் அளிக்கப்படும், விவரங்களுக்கு Kandiah Pararasasekaran 8D, Flechers Lane, Chundikuli. [16949]

### வைத்திய நிலையம்

புளியங்கூடல் வேலணையில் இயங்கிவந்த எனது வைத்திய நிலையங்கள் தற்காலிகமாக மானிப்பாய் வீதியில் உள்ள 198/1, பொன்னம்பா ஒழுங்கையில் [ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில்] இயங்கி வருகின்றது வைத்தியர் சு இவசம்பு [16967]

## ராஜீவ் கொலையுண்ட தினம் தி. மு. க. கூட்டம் ரத்து ஏன்?

### அனந்தநாயகி இப்படிக் கேட்கிறார்

ராஜீவ் காந்தி கொலையுண்ட தினம் தி. மு. க. வின் பொதுக் கூட்டங்கள் அனைத்தும் ஏன் ரத்துச் செய்யப்பட்டிருந்தன? இது ஆச்சரியமாக உள்ளது.

தமிழ்நாடு காங்கிரஸ் உபதலைவர்களில் ஒருவரான திருமதி ரி என். அனந்தநாயகி மேற்கண்ட கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசிய திருமதி அனந்தநாயகி, தி. மு. க. கூட்டங்களில் பேசிய பேச்சாளர்கள் அனைவரும் மே 21 இல் பெரிய சம்பவம் ஒன்று இடம்பெற இருப்பதாக பிரஸ்தாபித்து வந்தனர் என்றும் குற்றஞ்சாட்டினார் [இ-எ]

### உதவிக்குருவாக அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

திரு அன்தனி அரியரத்தினம் போல் உதவிக்குருவாக அபிஷேகம் செய்யப்பட உள்ளார்.

இம்மாதம் 8 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் பேராயர் டி ஜே அம்பலவாணர் அவர்களால் இந்த வைபவம் நடத்தி வைக்கப்படும் [இ]

### 15 பேர் பலி

இஸ்லாமபாத், ஜூன் 3

பெஷாவார் அருகே இராணுவ ஆயுதக்கிடங்கில் 3 நாட்களுக்கு முன் ஏற்பட்ட வெடி விபத்தில் 15 பேர் வரை கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

# Accountancy Classes

**(Nov. - Dec. 1991)**

| | | |
|---|---|---|
| **C. I. M. A.** | STAGE I | — ஆரம்பமாகிவிட்டது |
| | STAGE II | — 09 — 06 — 1991 |
| **A. A. T.** LONDON & SRI LANKA | (ALL STAGES) | — 01 — 06 — 1991 |
| **I. A. B.** | FOUNDATION | — ஆரம்பமாகிவிட்டது |
| | INTER | — 01 — 06 — 1991 |
| | FINALS | — 09 — 06 — 1991 |

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

(Result Oriented Institute in North)

14, St. Peter's Lane,
Hospital Road, JAFFNA.

[சி-0028]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

### மரியமுத்து மார்சலீன்பிள்ளை

தோற்றம்: 21 - 11 - 1921    மறைவு: 05 - 05 1991

"எத்தனை நாட்களோ நிழலைப்போல் சுற்றித் திரிந்தேன் ... ஆயினும் என் சகோதரரே நீங்களாவது என்னை மறவாதீர்கள்"

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 4-6-1991 செவ்வாய்க்கிழமை காலை 7-30 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்திலும், காலை 6. 00 மணிக்கு சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்திலும் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத் திருப்பலிகளில் பங்கு கொண்டு இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டும்படி அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அன்னாரின் இறுதிச் சடங்கின்போது நேரில் சமூகமளித்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

தெடிகாடு,
வல்வெட்டித்துறை. [17025]

## கண்ணீர் அஞ்சலி



### டாக்டர் J P. C. பிலிப்ஸ்

J P U. M [All Ceylon]. [M B B S Ceylon]
[உரிமையாளர், பிலிப்ஸ் நேர்ஸிங் ஹோம், யாழ்ப்பாணம்]

டாக்டர் J P. C பிலிப்ஸ் அவர்கள் 31-5-91 இல் சென்னையில் காலமானார். அன்னார் திருமதி மொயிறா பிலிப்ஸ் [நஞ்சி] அவர்களின் அன்புக் கணவரும், செல்வன் றஞ்ஜித் பிலிப்ஸ், செல்வன் அஜித் பிலிப்ஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற இராசையா பிலிப்ஸ் - அப்பலோனியா பிலிப்ஸ் தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி அன்ரனியா அன்ரனிப்பிள்ளை, J P. A. பிலிப்ஸ் [அமரசிங்கம்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலம் சென்ற திரு. M ஜேக்கப் - திருமதி லூடிவிக்கா லூட்ஸ் ஜேக்கப் ஆகியோரின் அன்பு மருமகனும், காலம்சென்ற S அன்ரனிப்பிள்ளை, திருமதி டொறத்தி பிலிப்ஸ், பொபி ஜேக்கப், திருமதி நதி பத்திநாதர், திருமதி ராணி பாலேந்திரா, தயா ஜேக்கப் ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்வன் அமரேஷ் பிலிப்ஸ், செல்வன் தினேஷ் பிலிப்ஸ் ஆகியோரின் சிறிய தந்தையும், A. E கைமர் [ஜோய்], திருமதி எட்னா செல்வநாயகம் [இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்], A. பெலீஷியா [திருமலை], திருமதி சித்திரா லோரன்பிள்ளை, A றெஜி செபஸ்ரியன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக எதிர்வரும் 4-6-1991 செவ்வாய்க்கிழமை மாலை 4 50 மணிக்கு யாழ் புனித மரியாள் பேராலயத்தில் ஓர் இரங்கற் பலி ஒப்புக் கொடுக்கப்படும். உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரும் திருப்பலியில் பங்குகொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்கு இறைவனை இறைஞ்சும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
திருமதி அன்ரனியா அன்ரனிப்பிள்ளை
[சகோதரி]

28, கதீட்ரல் வீதி,
யாழ்ப்பாணம். [16976]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழ் அகதிமுகாம்களில் தீவிர பரிசோதனை

## புலனாய்வுத்துறை நடவடிக்கை

புதுடில்லி, ஜுன் 3

தமிழ் நாட்டில் முகாம்களில் தங்கியுள்ள அனைத்து இலங்கைத் தமிழ் அகதிகளையும் தீவிர பரிசோதனைக்குட்படுத்தும் திட்டம் ஒன்றை இந்தியப் புலனாய்வுத்துறையினர் செயற்படுத்த இருப்பதாக ஏ.எப்.பி செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

சென்னையில் சொந்தமாக பங்களாக்களை வைத்துள்ள சகல இலங்கைத் தமிழர்களும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் –

விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் முன்னர் பயன்படுத்தப்பட்டு வந்த சகல வீடுகளும் விசேட பொலிஸ் சட்டத்தின் கீழ் கைப்பற்றப்படும் என்றும் மத்திய புலனாய்வுத்துறை மற்றும் விசேட விசாரணைக்குழு ஆகியவற்றைச் சேர்ந்த துப்பறியும் நிபுணர்கள் ஏ. எப் பி செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தனர்.

"விசாரணை எந்தத் திசையில் சென்று கொண்டிருக்கிறது என்பது எமக்கு இப்போது தெரிகிறது ஸ்ரீபெரும்புதூர் குண்டு வெடிப்பில் இறந்த மர்மப் பெண்ணின் பெயர், வயது, விலாசம் முதலியவற்றை வெளியிட நீண்ட நாள் எடுக்காது" இப்படி மத்திய புலனாய்வுத்துறையின் இரேஷ் - அதிகாரி ஒருவர் புதுடில்லியில் ஏ எப். பி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தமிழ்நாடு கரையோரப் பகுதியில் வசித்து வரும் சுமார் 90 ஆயிரம் இலங்கையர்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும் விசேட விசாரணைக் குழுவினர் திட்டமிட்டிருக்கின்றனர் என்றும் ஏ எப் பி அறிவித்துள்ளது.

இந்த வேளை கோடைக்கானலில் சுவரில் எழுதிக் கொண்டிருந்த இலங்கைத் தமிழ் டாக்ஸிச் சாரதி ஒருவரை பொலிஸார் கைது செய்திருக்கின்றனர்.

"ராஜீவ், வயிறு வெடித்து நீர் இறப்பீர். அதன் பின்னர் தான் தமிழ மக்களின் தீர்ப்பை நீர் விளங்கிக் கொள்வீர்" — என்று அந்த நபர் சுவரில் எழுதினாராம்.

மது பாவித்த பின்னர் தாம் அதனை எழுதியதாக அச்சாரதி பொலிஸாரிடம் தெரிவித்ததாகவும்–

ஆனால் அந்த நபர் வைத்திருந்த குறிப்பேட்டின் படி அந்த நபர் மே 21ஆம் திகதி [ராஜீவ் கொலையுண்ட தினம்] கோடைக்கானல், சென்னை ஸ்ரீபெரும் புதூர் ஆகிய இடங்களுக்கு சென்று திரும்பியதாக தெரிய வந்துள்ளதாகவும், 'டைம்ஸ் ஒப் இந்தியா' செய்தி வெளியிட்டிருக்கிறது. [தி-எ]

## இலவச வகுப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 3

வடமராட்சி கருகெ முத்துக் கழகம் இன்று திங்கள் மாலை 5-00 மணிக்கு யாழ் நற்சமூக நடுநிலையத்தில் இலவச சுருக்கெழுத்து, தட்டச்சு வரலாற்றுப் பாட வகுப்பை ஆரம்பிக்கிறது. [இ]

## ஊர்காவற்றுறை அகதிகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜுன் 3

ஊர்காவற்றுறை வவ. எச். சி ஏ, யினால் வழங்கப்படும் அகதிகளுக்கான நிவாரணத்தின் தொடர்ச்சியாக எதிர்வரும் 4 ஆம், 5ஆம் திகதியில் ஊர்காவற்றுறை கிராம சேவையாளர் பிரிவு ஜே 51 ஐச் சேர்ந்த அகதிகளுக்கு யாழ் வை எம் சி ஏ கட்டடத்தில் வைத்து அவரவர் குடும்ப அட்டைக்கு நிவாரணம் வழங்கப்பட உள்ளது. (இ)

---


## மனையியல் டிப்ளோமா பயிற்சி

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் மனையியல் டிப்ளோமா வகுப்புக்கள் 5-6-1991 இல் ஆரம்பிக்கப்படும். இப்பயிற்சி பெற விரும்புவோர் மேலே குறிப்பிட்ட திகதியில் சமுகம் அளிக்கவும்.

தலைவி,

**திருக்குடும்ப கன்னியர்மடம்,**

யாழ்ப்பாணம்.

[17031]

---

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பல் மூலம் கொண்டுவரப்படும் உலர் உணவுப் பொருள்களை அத்தியாவசிய சேவைகள் களஞ்சியத்திற்கு ஏற்றிக் கொண்டுசென்று இறக்குவதற்கான

## கூறுவிலை கோரல்

கப்பலில் இருந்து இறக்கப்படும் [4000] நாலாயிரம் மெற்றிக் தொன் அண்ணளவான உலர் உணவுப் பொருள்களைப் பருத்தித்துறைத் துறைமுக மேடையிலிருந்து கீழ்க்காணும் இடங்களில் உள்ள உணவுக் களஞ்சியத்திற்குக் கொண்டு செல்வதற்கு லொறிச் சொந்தக்காரரிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. கோண்டாவில்
2. யாழ்ப்பாணம்

கூறுவிலைகள் எனது காரியாலயத்தில் பெறக்கூடிய படிவத்தில் இணைப்பிரதியில் தயாரிக்கப்பட்டு, முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஏற்றியிறக்கலுக்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு 10 – 06 – 1991 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 12-00 மணிக்கு முன்னர் எனது அலுவலகத்திலுள்ள கூறுவிலை கோரல் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்கள் எனது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. பத்மநாதன்,
செய்திட்டப் பணிப்பாளர்,
புனர்வாழ்வுப் பகுதி,
செயலகம், யாழ்ப்பாணம்.

(சி 0074)

---

தெல்லிப்பளை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## முத்தமிழ் எழுச்சி விழா

இடம்: உடுவில் ஊராட்சி மன்ற திறந்த வெளியரங்கு.
காலம்: 04-06-1991 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி.

நிகழ்ச்சிகள்

மங்கள இசை
அளவையூர் சிதம்பரநாதன் குழுவினர்,
பாலகிருஷ்ணன் குழுவினர்.

சிறப்பு சொற்பொழிவு:
பேராசிரியர் கா. சிவத்தம்பி
தலைவர், நுண்கலைப் பிரிவு.
யாழ். பல்கலைக்கழகம்.

இசையரங்கு:
சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கம் குழுவினர்.

பட்டிமன்றம்:
கம்பன் கழக அமைப்பாளர்
திரு இ ஜெயராஜ் குழுவினர்.
விடயம்: "நாமிருக்கும் நாடு நமதென்று அறிந்தோமா?"

நாட்டிய நாடகம்:
"தலைவனை தேடி .."

நாடகம்:
"சகுனியர் மூவர்"

★ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் ★

-தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்

01 – 06 – 1991 (சி 0073)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

[யாழ்ப்பாணக் கிளை]

வலி - வடக்கு [தெல்லிப்பளை]
உதவி அரசாங்க அதிபர் பிரிவு

மேற்படி கூட்டம் 6-6-91 (வியாழக்கிழமை) பி ப 3 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். வலி - வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களை இதில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
C/75

கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

---

## ஹோமியோபதி வைத்திய டிப்ளோமா வகுப்புகள் (D. H. M. S.)

மேற்படி வகுப்புகள் 19 - 06 - 91 இல் ஆரம்பமாகவிருக்கின்றன

தகைமை: க பொ. த (உயர்தரம்)
காலம்: 3 வருடங்கள்

தமிழீழத்தின் தனிப்பெரும் ஹோமியோபதி வல்லுனர்களினால் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன.

மாவீரர் குடும்பம்/போராளிகள் குடும்பம் ஆகியவற்றில் உள்ள தகுதியானவர்களுக்கு இலவசக் கல்வித்திட்டம்

உங்கள் பதிவுகளுக்கு:
வைத்திய கலாநிதி வி. பீ. சுந்தரராஜன்,
அதிபர்,

**சாயி மருத்துவக் கல்லூரி,**

6, பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை,
(மக்ரவலிஸ் அருகில்) யாழ்நகர்

(சி-0036)

---

## நன்றி

தேவதாய் என்னை எனது கணவனிடம் கொண்டுவந்துசேர்த்த தற்காக அன்னைக்கு என் நன்றிகள் உரித்தாகுக. அன்னையிடம் உருக்கமாக வேண்டுங்கள் அன்னை என்றுமே சகாயம் புரிவாள்.

(17023)

---

## வேண்டுதல்

புனித ஜோசெப்பின் அம்மாள் ஏழையின் வேண்டுதல்களை இறைவனிடமிருந்து தவறாது பெற்றுக் கொடுப்பார். அவரிடம் கேட்கும் பக்தர்கள் தவறாது அனுகூலமடைவர்.

(17022)

---

## C. I. M. A.

### STAGE - 1

புதிய பிரிவு

ஆரம்பம் - 8-6-1991

விரிவுரையாளர்கள்

| | |
|---|---|
| Quantitative Methods | J Sathiyadas |
| Economics | S. Sivalingam |
| Business Law | Kandiah Navarendran |
| Accounting | S P Sivapathasundaram |

கட்டணத்தை பகுதி பகுதியாகச் செலுத்தலாம்

**School of Business Administration**

(OLR தேவாலய மேற்குப்பக்கம்)

16, 3ஆவது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

(சி/0076)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்:
3 5 - 1956

மரணம்:
18 5 - 1987

திதி: 3-6-1991

அமரர்
### ஜெயந்திதேவி யோகேஸ்வரன்
[ஆசிரியை - உருத்திரபுரம் மகாவித்தியாலயம் - கிளிநொச்சி]

அன்பு நிறைந்த அம்மா
அமுதூட்டி அரவணைத்தீர்
கடமைக்கு செல்வதற்காவெம்மை
கட்டி அணைத்து, முத்தமிட்டு -
விடைபெற்றீர்
போன அம்மா வரவில்லை......
பொழுதுகள் பல போய்விட்டது
எங்கள் வயதும் ஏறிவிடால்
எங்கள் அம்மா இனி வரமாட்டா
என்ற விளக்கமும் தெரிகிறது
ஆனையிறவு அரவில்
அம்மாவின் ஆத்மாவை அவலமாய் -
பறித்தாயா இறைவா?
எப்பிறப்பில் எம் இனிய
அம்மாவைக் காண்போம்.
ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கும்

அன்புக் கணவன், பிள்ளைகள்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [4114]

## பல்கலைக்கழக மாணவர்கள் பாதிப்பு

யாழ். பல்கலைக் கழகத்துக்கு மைற்றிக் அசிட், சிற்றிக் அசிட் போன்ற அமில வகைகளை கொண்டுவர அரசு தடை விதித்துள்ளதால், மாணவர்களின் ஆய்வு கூட வகுப்புகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
[ஓ-8]

## நூல் நிலையம் ஆரம்பம்

திருவாசகம் சபாரத்தினம் சுவாமிகள், தொண்டர் சபையினரின் சட்டணம் இல்லாமல் சமய நூல்கள் இரவல் வழங்கும் நூல் நிலையம் அண்மையில் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

சுண்டிக்குளி விதானையார் வீதியில் அமைந்துள்ள சபையின் பணிமனையில் இயங்கும் பிரஸ்தாப நூல் நிலையத்தை மாலை வேளையில் இப்போது பலர் பயன்படுத்தி வரும். முன்னாள் யாழ் உதவி அரசாங்க அதிபராக இருந்தவருமான திரு. கே. சபாபதிப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார்.

யாழ் மாவட்ட இந்த இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வே க. தனபாலன் சிறப்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து அங்கு திருவாசக முற்றோதலும் மகேஸ்வர பூசையும் சிறப்பாக நடைபெற்றன.
[அ - 30]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்:
05
...
01
...
1953



விண்ணில்:
14
...
06
...
1990

அமரர்
### புஸ்பறஞ்சினி பொன்னுத்துரை
திதி: 03 - 06 - 1991

ஏறும் சிரிப்பு தனைக்கண்டு ஓராண்டு
ஆனதம்மா - நீங்கள்
குழந்தையாய் சிரித்த தெல்லாம் கனவாகிப்
போனதம்மா - உங்கள்
மலர் முகத்தை காணாது மழலைகளும்
ஏங்குதம்மா - என்றும்
குலம் காக்க எங்களுக்கு துணையாக
வேண்டுமம்மா.

திரு. திருமதி பொன்னுத்துரை,
குடும்பத்தினர்.

மகளிர் கல்லூரி வீதி,
சாவகச்சேரி. [17030]

## 6 ஆம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம்:
10 - 03 - 1921

மறைவு:
08 - 06 - 1985

திதி: 03 - 06 - 1991



அமரர்
### வே. சி. நடராசா (V. S. N.)
[மிக் இன்டஸ்றீஸ் ஸ்தாபகர்]

எங்கள் ஐயா,
நீங்கள் அமரத்துவம் அடைந்து ஆண்டுகள் ஆறு ஆனாலும் உங்கள் நினைவுடன் வாழ்கின்றோம்.

மனைவி, மகன் மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

26&28 திருநெல்வேலி [சிவன்],
புது வீதி. யாழ்ப்பாணம். [17019]

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி





அமரர்.
### செல்லையா நடராசா
[முன்னாள் பொன்னம்பலம் இன்சவிஸ் உரிமையாளர், தவளக்கொளை]

மலர்வு: 20 — 7 — 1917
உதிர்வு: 14 — 6 — 1990

திருமதி
### நடராசா இராசம்மா

மலர்வு: 8 — 4 — 1922
உதிர்வு: 9 — 9 — 1989

திதி: 03 — 06 — 1991 திங்கட்கிழமை

எம்மை ஆளாக்கி வைத்த அன்புடைய பெற்றோர்களே நீங்கள் இருவரும் குடும்பத்தின் ஒளி விளக்குகளாகத் திகழ்ந்து பிரகாசத்தைத் தந்தீர்கள்.

தாங்கள் இருவரும் பூவுலக வாழ்வை நீத்து விண்ணுலகு அடைந்து ஓராண்டு கழிந்த போதிலும் தங்களைப் பற்றிய நன்றி கலந்த எண்ணங்கள் மறைவில்லை. தங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து இருக்கும்.

தங்கள் இருவரினதும் ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
[illegible] மைத்துனிமார்
உற்றார் உறவினர்கள்.

''சந்திரபவனம்''
கொக்குவில் - மேற்கு,
கொக்குவில். [17028]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
15
—
3
—
1969

உதிர்வு
4
—
5
—
1991



### தர்மலிங்கம் கோமதி

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
உம் பிரிவால் தாங்கொணா துயருறும்
நண்பர்கள், நண்பிகள்,
மலையாளந்தோட்டம், மற்றும் தயான் அண்ணா.
கரணவாய் தெற்கு, கரவெட்டி. [16921]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தூய்மை காத்தல்

பிறமொழிகளின் தாக்கத்திலிருந்து தமிழைப் பாதுகாத்துக் கொள்வதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. பிறமொழிகளின் செல்வாக்கால் தமிழ் தாக்கமுறுவது குறித்து, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு பேபி சுப்பிரமணியம் கவலை தெரிவித்திருக்கிறார். இப்போது பாவனையில் உள்ள தமிழ்ச் சொற்களில் எழுபது சதவீதமானவை பிறமொழிக் கலப்புள்ளவை எனவும் அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

உலகின் மூத்த மொழிகளில் தமிழ் ஒன்றென்றும், அது பழமை வாய்ந்தது என்றும், அழியாத சக்தி கொண்டது என்றும் பெருமைப்படுகிறோம். ஆனால் அதன் தூய்மையைக் காப்பாற்றுவதற்கு எங்களுக்கு முன் உள்ள சந்ததிகள் தவறிவிட்டன. அதே தவறை நாமும் செய்துவருகிறோம்.

அந்தந்தக் காலத்தில் செல்வாக்குள்ள வேற்றுமொழிகளின் சொற்கள் தமிழில் சேர்க்கப்பட்டு, மூலத் தமிழ்ச் சொற்கள் மறக்கப்பட்டுவிட்டன. பேச்சு, எழுத்து வழக்குகளில் இருந்து அவை அருகி விட்டன.

பிறமொழிச் சொற்களை தமிழுடன் சேர்த்துக் கொள்ளும் அந்நியச் சரக்கு மோகம் காலத்துக்குக் காலம் தமிழின் மூலத் தன்மையைச் சிதைத்துள்ளது. ஒரு காலத்தில், மணிப்பிரவாள நடை என்று ஏராளமான சமஸ்கிருதச் சொற்கள் தமிழுக்குள் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன. அதனைப் போலவே அரசியல் ஆதிக்க நிலைகள் மாறும் போதெல்லாம் பாரசீகம், அரபு, டச்சு மற்றும் பல மொழிச் சொற்கள் தமிழுக்குள் அத்துமீறியுள்ளன. சில சந்தர்ப்பங்களில் வேற்று மொழி பேசுவோர் மத்தியில் வாழ்ந்த மக்கள் அம்மொழிச் சொற்களுக்கு ஆட்பட்டு அவற்றைத் தமிழுடன் சேர்க்க பின்னர் அவை பொதுவான வழக்கில் வந்ததும் உண்டு.

முன்னர் சமஸ்கிருதம் போல, கடந்த பல தசாப்தங்களாக ஆங்கிலம் தமிழ்ச் சொற்களை "ஆக்கிரமிக்க" முனைகின்றது. இதற்கு ஆங்கிலேயர் தூண்டுகோல் என்பதல்ல. எம்மத்தியில் உள்ள அறிஞர்கள் எனப்படுவோர் சிலர் பிறமொழித் தாசர்களாக இருப்பதேயாம் அவர்கள் தமது வசதிக்காகப் பிறமொழிச் சொற்களை உள்வாங்கிக் கொள்ள, பின்னர் அவை சாதாரண மக்கள் மட்டத்துக்குப் பரவி நிரந்தர இடம் பிடித்து விடுகின்றன.

காலத்திற்கு ஏற்ற மாதிரி, கொடுந்தமிழைக் கைவிட்டு எல்லோருக்கும் விளங்கத்தக்க முறையில், இலகு நடையில், எளிய ஓட்டத்துடன் எழுதுவது வேறு. அது ஒரு வகையில் அவசியமும் கூட, ஆனால் தமிழ்ச் சொற்களைப் புறக்கணித்தோ அன்றி அவற்றை பாவிக்கும் இடத்தில் வேற்று மொழிச் சொற்களை புகுத்துவதோ ஆகாது. அது தமிழின் மூல வடிவத்தையும், தனித் தன்மையையும், சிறப்பையும் கெடுத்துவிடும்.

எனவே தமிழில் பிறமொழிக் கலப்பைத் தடுக்க ஆக்க பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிக அவசியமும், அவசரமுமாகும். விடுதலைப் போராட்டத்துடன் சேர்த்து தமிழின் தூய்மை காக்கும் போராட்டமும் தொடங்கப்பட வேண்டியதே.

# தமிழீழத்தை மீட்கும் போரில் வெற்றியின் இறுதிப் படியில்

## அன்ரன் பாலசிங்கம் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 3

தமிழீழத்தை மீட்கும் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் வளர்ச்சி உலகம் போற்றும் அளவுக்கு உயர்ந்து விட்டது. இப்போது நாம் வெற்றியின் இறுதிப் படியில் நின்று கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்.

இருநாள் சென் ஜோன்ஸ் மகாவித்தியாலயத்தில் சனிக்கிழமை நடைபெற்ற முத்தமிழ் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவுக்கு வித்தியாலய அதிபர் திரு அ ஸ்ரனிஸ்லோஸ் தலைமை வகித்தார்.

கலாநிதி பாலசிங்கம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களாக இருந்த பதினைந்து இளைஞர்கள் கட்டி எழுப்பிய தாயக மீட்புப் போராட்டமே, தமிழீழ விடிவுக்குக் கால்கோளாக அமைந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அந்தப் பதினைந்து பேர்களுக்கும் முன்னோடியாக விளங்கியவர்.

இங்கிலாந்தில் பேராசிரியராக இருந்த சமயம், 1979 ஆம் ஆண்டளவில், தமிழகத்திற்கு என்னை அழைத்து அரசியல் வகுப்பு நடத்துமாறு பிரபாகரன் கேட்டுக்கொண்டார்.

அந்தக் கட்டத்தில் இந்தப் பதினைந்து பேரும் எவ்வாறு ஈழத் தமிழர்களின் மீட்சிக்கு வழி சமைக்கப் போகிறார்கள் என்ற சந்தேகம் ஒன்று எழுந்தது.

### பிரபாவின் ஆவல்

ஆசியாவிலேயே மிகத் தரமான இராணுவ அமைப்பைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற ஆவல் ஆரம்ப காலத்தில் இருந்தே தலைவர் பிரபாகரனுக்கு இருந்ததையும் நான் அறிவேன்.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சி உலகமே போற்றுதற்குரியதாக வந்துள்ளமையை அவதானிக்கலாம்.

யாழ் கோட்டையை விடுதலைப் புலிகள் வெற்றி கொண்டதை அடுத்து யாழ்ப்பாணம் விடுதலை பெற்றது. கொக்காவில், மாங்குளம் முகாம்களின் வீழ்ச்சி தமிழீழத்தின் 80 சத வீதமான மீட்சிக்கு வழி வகுத்தது. இப்பொழுது வெற்றியின் இறுதிப் படியில் நின்று கொண்டிருக்கிறோம் — என்றார்.

விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் திரு தேவர் பேசுகையில் கூறியதாவது:-

இக் காலகட்டத்தில் இத்தகைய விழாக்கள் தேவைதானா என்று சிலர் கேட்கலாம். போராட்டச் சூழ்நிலையை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல இத்தகைய விழாக்கள் அவசியமாகின்றன.

வெற்றிப் படியில் நிற்கும் எமது போராட்டம், தமிழீழ மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு போர்ப் பேரணி வகுக்கையிலேயே முழுமையான வெற்றியாக மலரும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் — என்றார்.

முகாமைத்துவ கல்வி அதிகாரி திரு நா சண்முகாசலம் பிள்ளையும் பேசினார்.

மாணவர்கள், ஆசிரியர்கள் தயாரித்து வழங்கிய நடனம், நாடகங்களும் விழாவில் இடம்பெற்றன. [அ-5]

## 25 பேர் கைது

சென்னை, ஜூன் 3

தமிழ் நாடு பொலிஸார் நடத்திய சோதனையின் போது சென்னையில் கடந்த வியாழக்கிழமை ஈ பி. ஆர் எல். எவ் இயக்கத்தைச் சேர்ந்த 25 பேரை பொலிஸார் கைது செய்தனர் என்று தெரிய வருகிறது. [இ-ஏ]

## ராமராவ் ஆஸ்பத்திரியில் உண்ணாவிரதம் தொடர்கிறது

ஹைதராபாத், ஜூன் 3

டாக்டர்களின் ஆலோசனையின் பேரில் நேற்று அதிகாலை அவசரமாக ஹைதராபாத் நிஜாம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முன்னாள் முதலமைச்சர் என் ரி ராமராவ் தனது காலவரையறையற்ற உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆஸ்பத்திரியில் தங்கியிருந்தபடி எழுத்து மூலமாக அளித்த பதிலில், உண்ணாவிரதத்தை மேற்கொள்ள உறுதிபூண்டிருப்பதாக செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தனது விருப்பத்திற்கு மாறாக தாம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் ராமராவ் குற்றஞ்சாட்டினார். பலவந்தமாக ராமராவை ஆஸ்பத்திரியில் அனுமதித்த செயலை தேசிய முன்னணித் தலைவர் வி. பி. சிங் கண்டித்திருக்கிறார்.

ராஜீவ் கொலையுண்டதன் பின்னர் ஆந்திர மாநிலத்தில் இடம்பெற்ற வன்முறை பற்றி நீதி விசாரணை நடத்தி நிவாரணம் வழங்குமாறு கோரிய திரு ராமராவ் கடந்த நான்கு தினங்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார் என்பது தெரிந்ததே.

## ராஜீவ் கொலை குறித்து கல்லூரியிலும் விசாரணை!

சென்னை, ஜூன் 3

ராஜீவ் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட பெண் தொடர்பாக இந்திய பொலிஸார் சென்னை - தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியிலும் விசாரணை நடத்தினார்கள் என்று சென்னை தகவல்கள் தெரிவித்தன.

அந்த பெண்ணின் சாயல் போன்ற ஒருவர் 1989 வரை கிறிஸ்தவக் கல்லூரியில் படித்து வந்தார் என்று கூறப்பட்ட தகவல் பற்றியே அவ் விசாரணை நடத்தப்பட்டது.

எம். எஸ் ஸி [ரசாயனம்] படிப்பை முடித்துக் கொண்ட அப்பெண், மேற் படிப்பைத் தொடர கிறிஸ்தவக் கல்லூரியில் அனுமதி வழங்கப்பட்டதாகவும், ஆனால் அவர் அதை ஏற்க மறுத்து கல்லூரியை விட்டு விலகினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-ஏ]

## முன்னாள் அமைச்சர் விபத்தில் பலி

கௌஹாத்தி, ஜூன் 3

அஸ்ஸாம் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பதவி வகித்த திரு. தினேஷ் கோஸ்வாமி நேற்று அஸாம் தலைநகர் கௌஹாத்தி அருகே வீதி விபத்து ஒன்றில் உயிரிழந்தார்.

அவர் பயணம் செய்த கார் எதிரே வந்த டிரக் ஒன்றுடன் மோதிய போது திரு. கோஸ்வாமி உட்பட காரில் பயணம் செய்த நால்வரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

திரு கோஸ்வாமி ராஜ்ய சபை எம் பியாக இருந்தார். [இ-ஏ]

## விசர் நாய் படுத்தியபாடு

யாழ்ப்பாணம், ஜூன் 3

வீதியால் ஓடிய விசர் நாய் திடீரென ஒரு வளவில் புகுந்து முற்றத்தில் தாயுடன் விளையாடிக் கொண்டிருந்த ஒன்றரை வயதுக் குழந்தையை கடித்துக் குதறியது. குழந்தையைக் காப்பாற்ற முற்பட்ட தாயாரும் அந்த நாயினால் கடியுண்டார்.

அயலவர்கள் நாயைத் துரத்திய போது நாய் மீண்டும் அங்கிருந்த ஒரு கோழியையும், 2 வீட்டு நாய்களையும் கடித்து விட்டது, அயலவர்கள் அந்த நாயை அடித்துக் கொன்றனர்.

புத்தூரில் வெள்ளிக்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் மகேஸ்வரன் பராசக்தி [வயது 32] அவரது குழந்தை அச்சுதன் [வயது 1½] ஆகிய இருவருமே நாயினால் கடியுண்டவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். [இ-15]

## பன்ன வேலையில் பயிற்சி

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தி வரும் யுவதிகளுக்கான கைத்தொழில் பயிற்சி நெறிகளில் 3 மாத கால பன்ன வேலைப் பயிற்சியை 25 யுவதிகள் மே மாதத்துடன் பூர்த்தி செய்துள்ளனர்.

காந்தியூரில் தெரிவு செய்யப்பட்ட மேற்படி யுவதிகள் அப்பகுதி மூலவளமான பனம் பொருள் உற்பத்தியில் ஈடுபட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

பயிற்சியின் அடுத்த கட்டமாக ஒரு பகுதி யுவதிகளுக்கு நல்லெண்ணெய் தயாரிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் - உற்பத்தியாகும் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவும் - மகளிர் அபிவிருத்தி நடு நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நிலையத்தின் இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்தார். [இ-5]

### போராளிகளுக்கு இஸ்ரவேல் பயிற்சி

1983 முதல் இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு இஸ்ரவேல் பயிற்சி அளித்து வந்துள்ளது என்று வாஷிங்டன் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

## ஸியா குறித்து ராஜீவ்

புதுடில்லி, ஜூன் 3

ஸ்ரீபெரும்புதூர் குண்டு வெடிப்புக்குச் சில நிமிடங்களுக்கு முன்னதாக ராஜீவ் காந்தி நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஸியா - உல் - ஹக் மரணம் பற்றியும் பிரஸ்தாபித்து இருந்தாராம்.

"காஷ்மீர் பிரச்சினை குறித்து ஜெனரல் ஸியா - உல் - ஹக்குடன் உடன்பாடு ஒன்றைக் கைச்சாத்திட சகல ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பான வரைபடங்களும் தயாரிக்கப்பட்டிருந்தன. ஸியா - உல் - ஹக்கும் நானும் உடன்பாட்டில் கைச்சாத்திடுவது தான் பாக்கி என்ற நிலையில் ஜெனரல் ஸியா குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்" — என்று ராஜீவ் காந்தி நியூயோர்க் ரைம்ஸ் செய்தியாளர் பார்பரா குரொசெட்டின் கேள்விக்கு பதிலளித்திருந்தார். [இ-ஏ]

# 15 வருடம் பங்களிப்பு செய்தோரே ஓய்வூதியத்திட்டத்தில் சேர்க்கப்படுவர்

கொழும்பு, ஜூன் 3

ஊழியர் சேமலாப நிதிக்கு 15 வருடகாலம் பங்களிப்புச் செய்தவர்களே அரசாங்கத்தின் தனியார் துறையினர் பென்ஷன் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கு ஆகக்குறைந்த பென்ஷன் தொகையாக 750 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. [கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் 35 சதவீதம் பென்ஷனாக மாதந்தோறும் வழங்கப்படும்.]

ஓய்வு பெறும் போது சேவை செய்த ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மாத பென்ஷன் வீதம் ஓய்வூதியத் தொகை வழங்கப்படும்.

இது தொடர்பான சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

[illegible] செயற்படுத்த சமூக பாதுகாப்புச்சபை என்ற ஒரு புதிய அமைப்பை அரசு நிறுவவுள்ளது.

சமூக பாதுகாப்புச் சபையின் தலைவரை தொழில் அமைச்சர் நியமிப்பார். தொழிற் சங்கங்களின் சார்பில் மூன்று பிரதிநிதிகள், முதலாளிமார் சார்பில் இரண்டு பேர் மற்றும் மூன்று அரசு அதிகாரிகள் இச்சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர். [இ-ஏ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரண விநியோகம்; கிழக்கு தமிழர் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வழங்கப்படும் நிவாரண விநியோகங்களில் தமிழ்மக்கள் புறக்கணிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இப்பகுதிகளில் சிங்கள முஸ்லிம் மக்களுக்கு 16 தடவைகள் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்றும்—

ஆனால் தமிழ் மக்களுக்கு ஆறு தடவைகளே வழங்கப்பட்டுள்ளன என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வாகரை, வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சில கிராமங்களில் உள்ள தமிழர்களுக்கு — மூன்று தடவைகளே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாம். [உ-3]

## ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு ஜூன் 3

தமிழர் விடுதலைக்கூட்டணி தூதுக்குழு ஒன்று ஜனாதிபதி பிரேமதாஸாவை நேற்று சனிக்கிழமை சந்தித்து, வடக்கு - கிழக்கு நெருக்கடி குறித்து பேச்சுக்கள் நடத்தியது. [இ-எ]

# பரீட்சகர்கள் கொழும்பு செல்வதற்கு விசேட வசதி

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஜி. சி. ஈ. உயர்தர விசேட பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தம் செய்யும் வடமாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு விசேட போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகள் செய்யப்படும்.

இதற்கான ஏற்பாடுகளைக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் செய்து வருகிறார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாக இருக்கும் விடைத்தாள் திருத்தும் வேலைகளுக்கு இங்கிருந்து 300 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் செல்கிறார்கள்.

இவர்களை வவுனியா வரை கொண்டு சென்று விடவும்— கொழும்பில் இருந்து திரும்பும் போது வவுனியாவில் இருந்து இங்கு வரவும் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

கொழும்பில் இவர்கள் தங்க வேண்டிய வசதிகளையும், இங்கிருந்து செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளையும் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார். [உ-3]

# வாகனங்கள் திருத்துவதற்கு பெண்களுக்கும் பயிற்சி

## இன்று ஆரம்ப நிகழ்ச்சி நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 3

பெண்களுக்கான சுயவேலை வாய்ப்புத் தொழிற்பயிற்சித் திட்டத்தின் ஓர் அம்சமாக சகலவிதமான மோட்டார் வாகனங்களையும் பழுது பார்த்துத் திருத்துதல் பற்றி செய்முறையுடன் கூடிய பயிற்சியினை யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இந்த ஆரம்ப விழாவில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் சிலரும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இப்பயிற்சி ஆறு மாதங்களுக்கு நடைபெறும் எனவும், பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் வாகனங்கள் திருத்துவதற்கான உபகரணத் தொகுதி வழங்கப்படுவதுடன், வேலை வாய்ப்பு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமெனவும் மறுமலர்ச்சிக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ஒ]

# யாழ். இந்து மாணவர்கள் உணவு முத்திரை அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் தமது ஒரு மாத உணவு முத்திரைகளை, வசதி குறைந்த மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்த அன்பளிப்பின் முதற் பகுதியாக பதினாலாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறு (14,796) ரூபா பெறுமதியான அப்பியாசப் புத்தகங்களையும், பேனாக்களையும் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்திடம் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இரண்டாவது கட்டமாக யாழ். இந்து மாணவர் குறிப்பிட்ட தொகைப் பணத்தை அன்பளிப்புச் செய்ய இருப்பதாக விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன. [#]

# ஆயுத கிடங்கில் வெடிவிபத்து! அடிஸ் அபாபாவில் பலர் பலி!

எதியோப்பியத் தலைநகர் அடிஸ் அபாபாவில் உள்ள இராணுவ ஆயுதக்கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் நூற்றுக்கணக்கானோர் மாண்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

தலைநகருக்குள் கிளர்ச்சிப் படைகள் பிரவேசித்த போது, அரசுப் படையினர் ஆயுதக் கிடங்கைக் கைவிட்டு ஓடிவிட்டனர்.

அதன் பின்னர் பரவலாக இடம்பெற்ற சூறையாடலின் போது நூற்றுக்கணக்கானோர் ஆயுதக்கிடங்கினுள் நுழைந்தனராம். அப்போது ஏற்பட்ட வெடிவிபத்திலேயே பெரும் எண்ணிக்கையானோர் உயிரிழந்தனர்.

அடையாளம் காணப்பட்ட சடலங்கள் அகற்றப்பட்ட பின்னரும் இரு நூறுக்கும் அதிகமானோரின் சடலங்கள் ஆயுதக்கிடங்கினுள் காணப்பட்டன என்று மேற்கத்திய பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர். [ஒ-எ]

# காரைநகரில் குண்டுச் சத்தம்!

சுழிபுரம், ஜூன் 3

காரைநகர்ப் பகுதியிலும், அண்டிய கடற் பகுதியிலும் நேற்று முன்தினம் குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

அதிகாலை வேளையில் பொன்னாலை கடற்கரையோரமாகவும் வெடிச் சத்தங்கள் கேட்டன. [ஒ 28]

# பங்களாதேஷில் மீண்டும் சூறாவளி!

டாக்கா, ஜூன் 3

பங்களாதேஷை நேற்று அதிகாலை மீண்டும் சூறாவளி தாக்கியது. 100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளியின் போது கடல் அலைகள் 13 அடி வரை எழும்பி தாழ்ந்த பகுதிகளை மூழ்கடித்தன.

தென்பகுதியில் சூறாவளி காரணமாக நூறு பேர் வரையில் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பங்களாதேஷில் கடந்த இரு மாத காலத்தில் அடுத்தடுத்து பல தடவைகள் சூறாவளி வீசி, லட்சக்கணக்கான மக்களை பலி கொண்டு விட்டது என்பது தெரிந்ததே. [ஒ-எ]

# அஸாமில் வியாழன், சனி தேர்தல்கள்

கௌஹாத்தி, ஜூன் 3

அஸாம் மாநிலத்தில் சட்டசபை மற்றும் லோகசபைத் தேர்தல்கள் இம்மாதம் 6, 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

மாநிலத்தின் மலைப்பிரதேசங்களில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் மற்றும் உபகரணங்கள் நேற்று யானைகளின் உதவியுடன் எடுத்துச் செல்லப்பட்டன. [ஒ-3]

# மரடோனா நீதிமன்றில் விசாரணை

லண்டன், ஜூன் 3

ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற உதைபந்தாட்ட வீரர் மரடோனா போதைவஸ்து குற்றச்சாட்டுக்காக நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கி இருக்கிறார்.

கொக்கெயின் போதைவஸ்துவை வைத்திருந்தமை, கடத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்காக எதிர்வரும் 26 ஆம் திகதி இத்தாலிய நீதிமன்றம் ஒன்றின் முன் ஆஜராகுமாறு அவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருக்கிறது. [உ]

# ராமேஸ்வரத்தில் ஈழத் தமிழர் அறுவர் கைது!

இராமேஸ்வரம் அருகே கரையூரில் 6 இலங்கைத் தமிழர்களை தமிழ்நாடு பொலீஸார் கைது செய்தனர்.

சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடிக் கொண்டிருந்த போதே இவர்கள் அறுவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். [ஒ-எ]

## யாழ்ப்பாணத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது அதனை ஏற்க மறுத்து வேறு இடங்களில் தருமாறு கேட்டுள்ளதாக அறியவருகிறது.

இதே வேளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய வடக்கு மாவட்டங்களில் எழுதுவினைஞர் [illegible] தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. [illegible] வேலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டும் உள்ளன. [அ-3]

## பருத்தித்துறை இறங்குதுறை:

# உதவி நிறுவனத்தின் பணமும் கிடைக்காது!

யாழ்ப்பாணம், ஜூன் 3

பருத்தித்துறை இறங்குதுறை புனரமைப்பு வேலைகளுக்கு "யு. எஸ். எயிட்" நிறுவனத்தின் உதவி ஏதும் கிடைக்கும் சாத்தியம் இல்லை என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட விவசாய அபிவிருத்திக்கு வழங்கிய நிதியில் இருந்து இறங்குதுறை திருத்த வேலைகளுக்கு பணம் பெறுமாறு அந்த நிறுவனம் முன்னர் தெரிவித்திருந்தது.

ஆனால் யு. எஸ். எயிட்ஸ் திட்டத்தை வடபகுதியில் நடைமுறைப்படுத்தி வரும் "கெயர் இன்ரநஷனல்" நிறுவனம் தமக்குக் கிடைத்த பணம் முடிவடைந்துவிட்டதாகவும், அதனால் இறங்குதுறை வேலைகளுக்கு உதவ முடியாது என்றும் கைவிரித்து விட்டதாம்.

பருத்தித்துறை இறங்குதுறை புனரமைப்பு வேலைகளுக்கு, புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சும் இன்னும் பணம் ஏதவும் ஒதுக்கவில்லை என்பதும் —

அது சம்பந்தமாகப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரியிருப்பதும்— தெரிந்தவையே. [அ-3]

## படையினரின் அத்துமீறல்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தல் நடத்திவிட்டார்கள் என்பதற்காக, சம்பவம் நடந்த பல நாட்களின் பின்னர், படை சம்பந்தப்பட்ட இடத்துக்குச் சென்று நடத்தும் கொலைகள் திட்டமிட்ட கொலைகள் என்ற வகையையே சாரும்.

இவற்றைச் செய்ததற்காகப் படையினர் மீது நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். இல்லையேல் அத்துமீறலை அரசு அனுமதித்ததற்குச் சமமாகும்.

★ நீதி விசாரணை இல்லாத கொலைகளைச் செய்யும் படையினர் அடிப்படை மனித உரிமைகளை மீறுபவர்கள் ஆவர் அவர்களையும் நீதிமன்றத்தின் முன்னர் நிறுத்தித் தண்டிக்க வேண்டும்.

இல்லையேல் அரசு அத்துமீறலை அனுமதித்துப் பயங்கரவாதத்தை வளர்ப்பதற்குச் சமனாகும்.

★ திட்டமிட்ட கொலைகளையும், மக்களை "காணாமற் போக"ச் செய்வதையும் எந்த அரசாங்கமும் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

★ அது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு முரணானதாகும்.

★ சர்வதேச சட்டத்தின் கீழான மனித உரிமைகளைப் பேணும் முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும்.

ஆயுதக் குழுக்கள் பலவினருக்கு ஆத்திரமூட்டியதால் மனித உரிமைகளைப் பேண முடியவில்லை என்று கூறி எந்த அரசாங்கமும் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கக் கூடாது.

★ சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை ஸ்ரீலங்கா 1980 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டது.

அந்தச் சட்டத்தின் கீழ் தேசிய நெருக்கடியான வேளைகளில் சில உரிமைகளை ஓரளவுக்குக் குறைக்க அனுமதி உண்டு. ஆனால் அதற்காக உயிர் வாழும் உரிமைகளையும், சித்திரவதைக்கு ஆட்படா உரிமையையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தளர்த்தவோ குறைக்கவோ பிரஸ்தாப சட்டம் இடம் கொடுக்கவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவும். [அ]

## மனோகரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளின் தாய் கைதாகி இருந்தார்.

நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் சம்பந்தப்பட்ட பெண்மணிக்கு 6 வருட காலக் கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

சிறைத் தண்டனை அனுபவித்து வந்த இந்தப்பெண், ஆறு மாதங்களுக்கு முன்னர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார்.

விடுதலைக்குப் பின் இவர் தற்பொழுது எங்கு இருக்கிறார் என்பது குறித்து தெரியவில்லை.

இவர் ராஜீவ் காந்தியின் கொலையுடன் சம்பந்தப்பட்டிருந்தாரா என்பது குறித்தே இப்பொழுது ஆராயப்பட்டு வருகிறதாம்! [ஒ-3]

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு சின்னப்பு

ஓய்வுபெற்ற துரையிரதப் பகுதி ஐ. பி. டபிள்யூ (I. P. W)

மல்லிகைப்புரம் கோவில் தெற்கு வீதியைச் சேர்ந்த முருகேசு சின்னப்பு 1-6-91 சனிக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 2-6-91 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மூளாயில் உள்ள மருமகன் எஸ். கணேசன் இல்லத்தில் நடைபெற்றன. தயவு செய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:

மனைவி, மக்கள்: மருமக்கள்.

மூளாய் றோட்,
மூளாய். சுழிபுரம்.

(17038)

## வைத்திய கலாநிதி J. P. C. பிலிப்ஸ் (J P)

வைத்தியக் கலாநிதி J P C பிலிப்ஸ் J P அவர்கள் 1991-05-31 ஆம் திகதி இந்தியாவில் காலமானார். அன்னாரது ஈமக்கிரியைகள் 1991-06-01 ஆம் திகதி சென்னையில் நடைபெற்றன. அன்னாரது அஸ்தி யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும் மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

றொகேசன் பிரான்ஸிஸ்
63, மருதடி றோட்,
யாழ்ப்பாணம்.

(17035)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] லுள்ள அச்சகத்தில் 03-06-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org